## சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் என பெயரிடப்படுதல் – தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தினை விரிவுப்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

## சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந 4–1) துறை

அரசாணை (நிலை) எண். 20

நாள் 15.07.2026
திருவள்ளுவர் ஆண்டு 2057
ஸ்ரீ பராபவ, ஆனி 31

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை, நாள் 27.07.2022.
2. அரசாணை (நிலை) எண்.01, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை, நாள் 13.01.2023.
3. அரசாணை (நிலை) எண்.33, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை, நாள் 07.06.2023.
4. அரசாணை (நிலை) எண்.60, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை, நாள் 11.09.2023.
5. அரசாணை (நிலை) எண்.17, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை, நாள் 11.03.2024
6. அரசாணை (நிலை) எண்.71, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை, நாள் 27.06.2025.
7. அரசாணை (நிலை) எண்.96, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை, நாள் 08.10.2025.
8. தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.229, நாள் 15.06.2026.
9. சமூக நல இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 3060546/சஉதி–2 (1)/2026, நாள் 03.07.2026.

-------

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள 1,545 அரசு தொடக்கப்

பள்ளிகளில் (1 முதல் 5–ஆம் வகுப்பு வரை) பயிலும் 1,14,095 தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்கு காலை உணவு வழங்குவதற்காக முதற்கட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை செயல்படுத்த ஆணையிடப்பட்டது.

2. பின்னர், மேலே இரண்டு முதல் ஆறு வரை படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, தமிழ்நாட்டில் நகர்புறப் பகுதிகள் (மாநகராட்சி/ நகராட்சி/பேரூராட்சி) மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படும் அனைத்து அரசுப் பள்ளிகள், ஊரகப் பகுதிகளில் செயல்படும் அனைத்து அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளில் செயல்படும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு, தற்போது 37,447 அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 19,34,230 மாணவ மாணவியருக்கு பயனளிக்கக் கூடிய வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 15.06.2026 அன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 6 முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு, தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 17–ஆம் தேதி அன்று முதல் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

4. இதனைத் தொடர்ந்து, மேலே ஒன்பதாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சமூக நல இயக்குநர், இத்திட்டம் தொடர்பாக ஏற்கனவே வகுக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி, தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் 15,454 பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் 15,14,274 மாணவ/மாணவியர்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்தினை விரிவாக்கம் செய்வதற்கான அனுமதியையும், இதற்கான தொடரும் செலவினத்திற்காக ரூ.240.01 கோடியும் தொடரா செலவினத்திற்காக ரூ.28.71 கோடியும் ஆக மொத்தம் ரூ.268.72 கோடிக்கான நிதி அனுமதியையும் கோரியுள்ளார்.

5. மேலே பத்தி 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள சமூக நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

i. தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் செயல்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு **'பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்'** என பெயரிடப்படுகிறது.

ii. தமிழ்நாட்டில் செயல்படும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் 15,454 பள்ளிகளில் (இணைப்பு–I–ல் உள்ளவாறு) 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு, இத்திட்டம் விரிவுப்படுத்தப்படுகிறது.

iii. இத்திட்டம் இணைப்பு–II–இல் உள்ள ஏற்கனவே பின்பற்றப்படும் நடைமுறைகளின் அடிப்படையில் விரிவுப்படுத்தப்படுகிறது.

iv. மாணவ/மாணவியரின் வருகை மற்றும் உணவு உட்கொள்பவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 12,87,133 மாணவ/மாணவியருக்கு, ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.12.71 செலவினம் என்ற அளவில், ஆண்டுக்கு 210 வேலை நாட்கள் பள்ளிகள் செயல்படும் என்பதைக் கருத்தில்கொண்டு, இத்திட்டத்திற்கு ஆண்டுதோறும் மொத்த உத்தேச செலவினமாக ரூ.343,55,00,000/– (ரூபாய் முந்நூற்று நாற்பத்து மூன்று கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) செலவிட நிதி அனுமதி வழங்கப்படுகிறது.

v. 2026–2027 ஆம் நிதியாண்டுக்கு, இத்திட்டத்துக்கென கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்ட தொடரும் செலவினம் ரூ.204,05,84,395/– மற்றும் தொடரா செலவினம் ரூ.13,57,25,000/– ஆக மொத்தம் உத்தேச செலவினம் ரூ.217,63,09,395/க்கான (ரூபாய் இருநூற்று பதினேழு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

| **வ. எண்** | **விபரம்** | **உணவூட்டுச் செலவினம்** |
|---|---|---|
| 1. | 12,87,133 மாணவர்களுக்கு 124 நாட்களுக்கு ஆகும் செலவு (ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.12.71 வீதம் ) | ரூ. 202,85,73,093/– |
| 2. | திங்கட்கிழமைகளில் பொங்கல் வழங்குவதற்கு கூடுதலாக ஆகும் செலவு ரூ.0.29 வீதம் 12,87,133 மாணவர்களுக்கு 23 நாட்களுக்கு | ரூ.85,85,177/– |
| 3. | மையங்களுக்கு தேவைப்படும் பதிவேடுகள், பதிவேடு ஒன்றிற்கு ரூ.125/– வீதம் மொத்தம் 15,409 மையங்களுக்கு | ரூ.19,26,125/– |
| 4. | நிர்வாக செலவினம் | ரூ.15,00,000/– |
| | **மொத்த தொடரும் செலவினம்** | ரூ.204,05,84,395/– (அதாவது) ரூ.204.06 கோடி |

| | | |
|---|---|---|
| 1. | **தொடரா செலவினம்**<br>தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தினால் 5,429 மையங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. எனவே அம்மையங்களுக்கு மையம் ஒன்றிற்கு ரூ.25,000/– வீதம் தளவாடசாமான்கள் கொள்முதல் செய்திட ஆகும் செலவினம் (5429 x 25,000) | ரூ.13,57,25,000/–<br>(அதாவது)<br>ரூ.13.57 கோடி |
| | **மொத்த செலவினம்** | ரூ.217,63,09,395/–<br>(அதாவது)<br>ரூ.217.63 கோடி |

**(ரூபாய் இருநூற்று பதினேழு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்)**

6. மேலே பத்தி–5(v)ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

| | | |
|---|---|---|
| i. | **பொது பிரிவு**<br>2236 சத்துணவு – 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 மதிய உணவு – மாநிலச் செலவினங்கள் – BG முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்துப் பள்ளி நாட்களிலும் அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்குதல்– 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.<br>(த.தொ.கு: 2236 02 102 BG 30903) | ரூ. 134,45,24,458/– |
| ii. | **சிறப்புத் திட்டம்**<br>2236 – சத்துணவு – 02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 789 – ஆதி திராவிடர்கள் முன்னேற்றத்திற்கான சிறப்பு செயல் திட்டம் (DAPSC) – மாநிலச் செலவினங்கள் – JS ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் பள்ளி நாட்களிலும் அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்குதல் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவி தொகை.<br>(த.தொ.கு:2236 02 789 JS 30903) | ரூ. 63,15,19,064/– |

| | | |
|---|---|---|
| iii. | **பழங்குடியினர் பகுதித் துணை திட்டம்**<br>2236 சத்துணவு – 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 796 பழங்குடியினர் முன்னேற்றத்திற்கான சிறப்பு செயல் திட்டம் (DAPST) – மாநிலச் செலவினங்கள் – JM பழங் குடியினர் பகுதித் துணை திட்டத்தின் கீழ் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்து பள்ளி நாட்களிலும் அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்குதல் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.<br>(த.தொ.கு: 2236 02 796 JM 30903) | ரூ. 6,11,14,748/- |
| iv. | 2236 – சத்துணவு – 02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102 – மதிய உணவு – மாநிலச் செலவினங்கள் – BG முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்துப் பள்ளி நாட்களிலும் அரசு தொடக்க பள்ளி மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்குதல் – 333 தொழில்முறை மற்றும் சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 03 சிறப்புப் பணி<br>(த.தொ.கு :2236 02 102 BG 33303) | ரூ. 13,91,51,125/- |

7. மேலே பத்தி 5(v)இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" (New Instrument of Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்(வ.செ.பொ.-1)துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963 இல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித்(வ.செ.பொ.1) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2026-2027 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித்(வ.செ.பொ-1/ச.ந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.14625869/ ச.ந /2026, நாள் 15.07.2026-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 2026070251.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. பல்லவி பல்தேவ்
அரசு செயலாளர்

பெறுநர்,
சமூக நல இயக்குநர், சென்னை-5.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை-15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை-34.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், கீழ்ப்பாக்கம், சென்னை-10.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை-28.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை.6.
மின் ஆளுமை இயக்குநர், சென்னை.2.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை-I/II), சென்னை-18.
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.

நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை-9.
அரசு செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை-9.
நிதித்(ச.ந/வ.செ.பொ-1/வ.செ.பொ-2)துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.2) துறை, சென்னை.9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜெ.எ.ஜெர்லின் ரீகனி
15.07.2026

பிரிவு அலுவலர்.

15/7/26

## இணைப்பு–I

## அரசாணை (நிலை) எண்.20, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 15.07.2026

பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தினை 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு விரிவாக்கம் செய்யப்படவுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் விவரம்

| வ. எண் | செயல்படுத்தும் முகமை | பெருநகர சென்னை மாநகராட்சி | நகராட்சி நிர்வாகம் | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | தற்போது காலை உணவுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்பு வரை உள்ள பள்ளிகள் | 220 | 1,184 | 7,383 | 8,787 |
| 2. | 6 ஆம் வகுப்பு முதல் செயல்படும் பள்ளிகள் | 227 | 966 | 5,474* | 6,667 |
| 3. | மொத்தம் | 447 | 2,150 | 12,857 | 15,454 |

(*ஒரே வளாகத்தில் இரு பள்ளிகள் அமைந்துள்ள 45 பள்ளிகளுக்கு, இரு பள்ளிகளுக்கு ஒரு சமையலறை மட்டுமே போதுமானது என்பதால் ஊரகப் பகுதிகளில் உள்ள 5,474 பள்ளிகளுக்கு 5,429 மையங்கள் அமைப்பதற்கு தேவையான செலவின விவரங்கள் கணக்கிடப்பட்டுள்ளது)

ம. பல்லவி பல்தேவ்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

ஜெ.ஜெஸ்லின் ஏஞ்சலி
15.07.2026

பிரிவு அலுவலர்

15/7/26

## இணைப்பு-II

## அரசாணை (நிலை) எண்.20, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள் 15.07.2026

## வழிகாட்டு நடைமுறைகள்

**செயல்படுத்தும் முகமை :-**

i. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் மூலமாக ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

ii. இதர அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் மூலமாக நகராட்சி இயக்குநர், நகராட்சி நிர்வாகம் அவர்களால் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

iii. மாநகராட்சி / நகராட்சி பகுதிகளை ஒட்டியுள்ள பேரூராட்சி பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் மூலமாக நகராட்சி இயக்குநர், நகராட்சி நிர்வாகம் அவர்களால் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

iv. ஊரகப்பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளை ஒட்டியுள்ள பேரூராட்சி பகுதிகளில் (மேலே iii-இல் உள்ள பேரூராட்சி பகுதி பள்ளிகள் தவிர) உள்ள அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக அந்தந்தப் பள்ளியிலேயே காலை உணவு தயாரித்து வழங்கப்படும்.

**உணவு வகைகள் :-**

i. காலை உணவுத் திட்டம் தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள காலை உணவு வகைகள், பொதுவான வழிமுறைகள் மற்றும் கண்காணிப்பு குழுக்கள் ஆகியவை தற்போதைய விரிவாக்கத்திற்கும் பொருந்தும்.

**செலவினம் :-**

i. காலை உணவுத் திட்டத்தின் கீழ் ஒரு மாணவர்/மாணவிக்கு நாள் ஒன்றுக்கு, மூலப்பொருட்கள், காய்கறி மற்றும் தாளிதப் பொருட்களுக்கு ரூ.7.00, எரிவாயு ரூ.1.25 மற்றும் பணியாளர்களின் மதிப்பூதியம் / போக்குவரத்து / இதர செலவினம் ரூ.4.46 உட்பட மொத்த செலவினம் ரூ.12.71-க்கு மிகாத வகையில் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

ii. பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் மூலம் செயல்படுத்தப்படும் காலை உணவுத் திட்ட செயல்பாட்டிற்கு தளவாட சாமான்கள் தேவைப்படின் பெருநகர சென்னை மாநகராட்சி பொது நிதியிலிருந்து சென்னை மாநகராட்சி ஆணையரும், மற்றும் நகராட்சி

பொது நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குநரும் இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

iii. ஊரகப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் சமையலறை வசதிகள் தேவைப்படும் மையங்களுக்கு உரிய வசதிகளை செய்துதர ஏற்படும் செலவினத்தை ஊராட்சி பொது நிதி அல்லது வேறு திட்டங்களின் நிதி மூலம் செலவு செய்ய மாவட்ட ஆட்சியருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

iv. பதிவேடுகள் அச்சிட்டு வழங்குவதற்கான செலவினம் மற்றும் நிர்வாக செலவினங்களை சமூக நல இயக்குநர் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

**செயல்படுத்தும் பொறுப்பு :–**

i. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 8ம் வகுப்பு மாணவ / மாணவியர் எவரும் விடுபடா வண்ணம் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த வேண்டிய பொறுப்பு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் செயலாக்க முகமைகளைச் சாரும்.

ii. இது தவிர, காலை உணவுத் திட்டத்திற்கான உணவுப் பொருட்களை தேவைக்கேற்பவும், தரமானதாகவும் பெறுவதை உறுதி செய்தல், சமையல் உபகரணங்கள் மற்றும் இதர உபகரணங்கள், இணைப்புகளுடன் கூடிய எரிவாயு அடுப்புகள் முன்னதாகவே ISI தரத்தில் கொள்முதல் செய்தல், சமையலறைகள் முழுமையாக இயங்கிட ஆயத்த நிலையில் வைத்தல் என இத்திட்டத்தினை செம்மையாக செயல்படுத்திட வேண்டிய அனைத்து நிலைகளையும் தயாராக வைக்கவேண்டிய பொறுப்பு செயலாக்க முகமைகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களைச் சாரும்.

iii. தொடரா செலவினங்களை அனுமதிக்கும் போது பள்ளி மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைகளுக்கு ஏற்ப மாற்றம் செய்துகொள்ள செயலாக்க முகமைகள்/ மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

iv. பள்ளிகளுக்கு தேவையான தட்டு மற்றும் குவளைகளை உள்ளாட்சி பொது நிதி அல்லது பெருநிறுவன சமூக பொறுப்பு நிதி மூலம் செயலாக்க முகமைகள் ஏற்பாடு செய்து தயார் நிலையில் வைக்க வேண்டும்.

ம. பல்லவி பல்தேவ்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

15.07.2026

பிரிவு அலுவலர்

15/7/26